உ

ஸ்ரீ கண்ணன் துணை



# சேதுபந்தனமும் தேவிபட்டணம் சக்கரத் தீர்த்த வர்ணிப்பும்.


இஃது

மதுரை தெற்குவாசல் செட்டியூரணித்தெரு,

நா. மா. முத்திருள நாடார்

அவர்களால் இயற்றியது.



மதுரை

ஸ்ரீ ஜெகதாம்பாள் பிரஸில்

பதிக்கப்பெற்றது.

19[illegible]

உ

கண்ணன் துணை.



# சேதுபந்தனமும் தேவிபட்டணம் சக்கரத்தீர்த்த வர்ணிப்பும்.

ஆகுவா கனமூர்த்தி ஐங்கரன் பாதம்
அடியேன் மிகத்துதித்து
காகுத்தன் றன்மருகன் மயிலேறுஞ் சுப்ரமண்யம்
கந்தரையும் போற்றிசெய்தே
கைலாச வாசரொடு பருவத ராஜகுமாரி
கஞ்சமலற் றாள்தொழுது
மைவிழியாள் சீதையர்க்கு ஸ்ரீராமசாமி
வசனித்து சேதுவுட
மருத்துமலைத்தை நால்வழியாய் சொன்ன கதையறிந்து
மாவுலகோர் தானறிய
வர்ணிப்பாய்ப பாடிருக்கார் சபையோர்களறிந்து
மங்களமாய் ஆசீர்வதிப்பீர்
ஆலவாய் தென்மதுரை முகமதியர்கள் வசிக்கும்
அடுத்தவெளி வீதியிலே
செட்டியூரணித்தெருவில் மாயாண்டி நாடார்
சிறந்தவத் தாலுதித்த

அடியார்க் கெளியரெனும் முத்திருள் நாடார்
அன்பா யுரைத்தகதை

படியிலுள்ளோர் தானறியச் சேதுமகத் துவத்தை
பாடுகிறே னிப்பொழுதே

இலக்கண இலக்கியங்கள் பதினெண் புராணம்
இதிகாச முற்றுணர்ந்தோர்

புலவரிதி லேதேனும் பிழைக ளிருந்தாற்
பொருத்தருளும் புண்ணியரே

தாசரென வேபொறுத்து ஆசிர் வதிக்க
தாழ்பணிந்தேன் மாசபைக்கே

தசரதனார் சொற்படியே தாசரதி ராமன்
தண்டகா ரண்யமதில்

ரிஷிகளுக்கு ஆதரவா யிருக்கும்போ தங்கே
நிஷ்டூரன் ராவணனும்

ஜனகமகா ராஜபுத்திரி ஸ்ரீராமர்தேவி
ஜானகியைத் தான்திருடி

வனத்தில்வைத்த பிற்பாடு அனுமாரா லறிந்து
வானரசே னைபரும்

எழுபத்தி ரெண்டுவெள்ளம் குரங்குப்படையோடு
எகியே லங்கைதனில்

பழுதில்லா ராமர்சென்று ராவணாதி ராட்சதர்
படைகள்முதல் யாவரையும்

துஷ்டசம் மாரங்கள்செய்து விபீஷணர்க்கு பட்டம்
சுகமாகத் தான்முடித்து

இஷ்டமுள்ள தம்பியொடு சீதைமுதலானோர்
மகிழ்ந்திருக்குஞ் சமயதந்தனில்

கடல்கடந்து ராவணனை கண்டித்த ராமனுந்
கணக்கதனைத் தான்பார்த்து

படபடப்பாய் விபீஷணனைப் பார்த்து ஒருவசனம்
பகருவா ரப்பொழுதே

பக்தர்கள் சிகாமணியே விபீஷணாழ் வானே
பாதனுக்குச் சொன்னகெடு

இத்துடனே நாள்சரியா யானதா லிச்சணமே
யான்முதல்நீ யாவர்களும்

அயோத்தியா புரிதனக்கு போகவேணு மென்று
அரிராமர் சொல்லிடவே

ஜெயராமா ஸ்ரீராமா மாதவ நாராயணா
செந்திருமாள் நாயகமே
எங்களண்ணன் ராவணனும் அருந்தவத்தினாலே
இரிரண்டு நான்குதலை
பங்கயத்தோன் றன்னிடத்தில் வாங்கிய விமானம்
பாங்கா யிருக்குதிப்போ
அந்தவிமா னந்தனிலே வானரப் படையோடு
யாவருமே தானேறி
சந்தோஷ மாய்நமது நகர்செல்ல லாமென்று
சாற்றிட விபீஷணரும்
மாராமரமே ழுடுருவக் கணைவிட்ட ராமர்
மகிழ்ந்தே விபீஷணரே
குறைவில்லா வானரர்கள் எழுபத்தி ரெண்டுவெள்ளங்
குரங்குகட்கும் நாமெவர்க்கும்
புஷ்பவிமா னந்தானும் இடந்தருமா வென்று
புகன்றாரே ராமபிரான்
அச்சனம் விபீஷணரும் புஷ்பவிமா னத்தை
அனைத்தெதிரே முன்னிருத்தி
சுவாமியிந்த விமானமதில் எனதண்ண னிராவணன்
சொர்ணயிலங் காபுரிவாழ்
காமியரும் ராக்ஷதரும் இரண்டாயிர வெள்ளம்
கனத்தபடை மூலபலம்
சகலசேனை களேறி பூமிப்பிர தெக்ஷணம்
தான்வந்தா ரோர்தினத்தில்
மகிமைபெற்ற ஸ்ரீராமா யின்றஷ்ட மிக்குமுன்னே
மாதவனே சென்றிடலாம்
என்றே விபீஷணனும் சொல்லவே மகிழ்ந்து
இந்திர விமானமதில்
சென்றேறிச் சீதையொடு ஸ்ரீராம ரிருக்க
சிறந்ததம்பி லட்சுமணர்
வானசேனா பதிகள் யிருபத்து நால்வர்
வானர்கூட் டத்தோடு
ஞானநிலை கண்டுணர்ந்த விபீஷணனும் வாரும்
ராக்ஷதப் பெரும்படையும்
ஸ்ரீராமர்க் கன்புடைய விபீஷணர் குமாரத்தி
திரிசடையு மந்திரிகளும்

தாராளமாய் விமானம் தானேறிச் சீதைமலர்த்
தாழ்தொழுது வீற்றிருக்க

ராமனொரு விபூஷணனும் சகலரையும் பார்த்து
யாதுங்குறை யில்லையென்று

க்ஷேமமுட னேயறிந்து விமானமந்திரஞ் செபிக்க
நேரா யெழுந்ததுவே

புஷ்பவிமா னம்பறந்து இலங்கை நகரத்தை
புகழாகச் சுற்றிடவே

துஷ்டர்குலக் கருவறுத்த ராமர்சீதை யைப்பார்த்து
சொல்லுவார் மாதரசே

உனைக்களவிற் கொண்டுவந்த இராவணன் மாளிகையிது
உடன்பிறந்த கும்பகர்ணன்

தனக்கிளைய விபூஷணனார் அரண்மனையிதாகுமென்
தம்பிதனை ரெண்டுதரம்

கொண்டதொரு யிந்திரஜித்தன் தம்பிமார் மந்திரிகள்
கூடுஞ் சபையிதுபார்

அன்றுன்னைக் காணவந்த அனுமன் றூதில் மாண்ட
அரக்கர்படு களமிதுவாம்

அழியாச்சமுத்திரத்தை அணைகட்டி வந்து
அரக்கருடன் போர்புரிய

வாழியில்லே லாயுதங்கள் யாங்கள் படையோடு
வந்திருந்த பாசறைபார்

முதல்நாள்யுத் தந்தனிலே ராவணன் படைகூட்டி
மூர்க்கமாய் வந்தெதிர்த்து

அதாகதமாய்ப் போர்புரிந்து மறைந்தோடிப் போன
அந்தயிட மேயிதுபார்

மறுநாள் முதலாக இந்திரஜித் தன்வந்து
மகத்தான போர்புரிந்தான்

னருமையுள்ள மைத்துனனால் மாண்டவிட வாசல்
அலங்காரம் பார்சீதா

அதிகாயன் தன்னோடு மந்திரிசே னாதிபதிகள்
அனேகம் படைகளோடு

மதிமோசத் தாலிறந்த யிடங்களிது வாகும்
மங்கையர் சிகாமணியே

உன்கொழுந்தன் லட்சுமணன் நாகாஸ்திரத்தால்
ஒடுங்கினது யிந்தயிடம்

அன்புடைய லட்சுமணன் பிரமாஸ்த் திரத்தால்
அடங்கினது யிந்தயிடம்

அரிபரிய தாங்கெருடன் வந்துநா கஸ்திரத்தை
அழித்ததுவு மிந்தயிடம்

பிரமாஸ்திர மயக்கந்திர என்றுதன் அனுமான்
பிரபலமாய் கொண்டுவந்த

சஞ்சீவி மலையுடைய வாடையால் வானரர்
தானெழுந்த திந்தயிடம்

அஞ்சாத யிந்திரசித்தன் மாண்டபின்னாலே
அகோரமாய் வந்தெதிர்த்த

கொடுமையுள்ள ராட்சதர்கள் சேனைகளை அறுத்து
கொடுந்தணலால் வேகவைத்து

பெரும்போர் புரிந்தயிடம் பாரடி யென்னாசை
பெண்ணரசே கண்மணியே

கீழ்கோட்டை வாசலிலே ராவணன் தம்பியவன்
கெருவமெல்லாந் தானழிந்து

வாழ்விழக்க மூலபலம் யிரண்டாயிர வெள்ளம்
வந்தவரென் றெதிர்த்து

கொடும்போர்கள் செய்தயிடம் மூலபலம் மாண்ட
கூறரிந்து ராவணனும்

அடுத்தெதன் றனைச்செயிக்கத் தனைச்சேர்ந் தவர்
யாவருமென் றெதிர்த்து

பிரமாஸ் திரமதனால் ராவணன் பத்துச்
சிரசோ டுடல்விழுக

சிராமன ராவணனும் செத்தயிட மிதுமானே
தேன்மொழியே நீபாராய்

இலங்கைநகர் தன்னிலுள்ள அதிசய மனேகம்
எடுத்துரைப்பா ராருமுண்டோ

சிலை நுதலாய் வானரர்கள் கட்டும் அணை யிதுதான்
செந்திருவே நீபாராய்

அணையின் கடைக்கோடி தனுஷ்கோடி சேதுவென
அறைபுகின்ற திந்தயிடம்

மனையாளே யிந்திடத்தின் மகத்துவமு மெல்லா
மறையக்கேள் மாதரசே

தனுஷ்கோடி சேதுவென்று சொல்லுமிவ் விடத்தில்
ஜானகியே நாமிருவர்

அநுமான் சுக்கிரீபனோடு தம்பிலட் சுமணன்
அரிதான விபீஷணனும்
யாவருமே யோர்மனதாய் ஸ்நானங்கள் செய்து
யாகவிதி தான்முடித்தால்
பாவமெல்லாந் தான்தீர்ந்து சாயுட்சிய மடைவரென்று
பகருவது யிந்தயிடம்
ஜனகரா சன்குமரி எனதுமனே கரியேயிச்
சமுத்திரஞ்சூழ் பூவுலகில்
மனமார வேகோடிய பாவங்கள் செய்து
மாந்தர் ஓரேதினைவாய்
எப்படியா வதுவந்து யிவ்விடத்தில் மூழ்கி
இராமலிங்கத் தைத்தொழுதால்
செப்புமுயில் மாதரசே அவர்கள்செய்த பாவம்
ஜெகந்தனிலே தான்தீர்ந்து
பலவித விபரிதகளும் சவுக்கியம தாகி
பாரில்வெகு நாளிருந்து
சுலபமாய்க் கைலாசம் வைகுண்டஞ் சேர்ந்து
சுகமடைவார் மாதரசே
உன்னை விராவணனைக் கும்பகர்ணன் முதலான
உலகுநிறை ராட்சதரை
கொன்றபிர்ம கத்தியெனும் பாவமது தீரக்
கோதையரே நம்முடைய
பட்டண மயோத்திசென்று வசிஷ்டர்முத லான
பலரிஷியோ டிங்குவந்து
இஷ்டமுள்ள என்துாதன் அநுமானாற் காசி
லிங்கமது கொண்டுவந்து
இராமலிங்க மென்றுசொல்லி பூசித்து பாவம்
அகற்றுவோம் பின்னுலணங்கே
சேமம் பெருகிடவே பூவுலகத்தோர்கள்
ஜெகமீதில் மோசடியாய்
பணத்தை அபகரித்து கொலைகளவு சூது
பண்ணியே கர்மமதால்
பிணைநாற்ற மானதொரு நோயால் வருந்தும்
பெருங்கருமப் பாவியரும்
சேதுவிலே தான்முழுகி தர்ப்பணங்கள் செய்து
ஸ்ரீராம லிங்கமதை

ஆதரவாய் நாள்தோறும் பூசித்துப் பணிந்தால்
அவர்கள்செய் பாவந்தீர்ந்து
நினைத்தகாரி யங்களெல்லாம் கைவல்ய மாகி
நிலம்புகழ வேவாழ்ந்து
இணையில்லா மோக்ஷபதம் அடைவர் தப்பாது
எனதருமைப் பெண்ணணங்கே
பூவுலகில் துஷ்டர்சிலர் தாய்மாமி தங்கையக்காள்
புத்திரிமற் றோர்கள்தனை
பாவமென்று யெண்ணாமல் மனம்போற் புணர்ந்து
பாருலகி லேதிரிவோர்
வருமமாய்ச் செய்தவர்கள் கர்மத்தி னாலே
வருங்குஷ்ட நோய்கள்தான்
என்னகஷ்டப் பட்டேனும் சேதுவில் வந்து
எழுகடல்நீ ராடியபின்
கன்மமெல்லாந் தான்தீர இராமலிங் கத்தை
கருத்தொருமித் தேதுதித்தால்
சகலபா வந்தீர்ந்து இராமநாத னருளால்
தாரணியில் வேந்தரைப்போல்
புகழாக வேவாழ்ந்து பரகெதியு மடைவார்
பூவையர் சிகாமணியே
பிதாமாதா தம்பி அண்ணன் குரு அரசன் மாமன்
பேருலகி லுள்ளோரை
உதாசினம தாய்ப்பேசி அவமாயயிதி சித்து
உள்ளபொரு ளைப்பறித்து
லாகிரி மிகப்பொசித்து தாசிவிப சாரி
மாதரை யிஷ்டப்படியே
போகித்து தன்னிளையோர் அண்ணன்தாய் தந்தையை
போர்செய்து மேவிரட்டி
அடாதுசெய்த பாவியரும் தன்பெண் சாதியரை
அடித்தே துரத்தியபின்
விடாக்கொடுமை செய்தவரும் கருமவியா தியினால்
மிகநொந்து வந்தோரும்
வழிநடந்து சேதுவந்து கடலிலே நீராடி
மாதர்ப் பணக்கிரிகை
தெளிந்தமகா வேதியரால் யாகாதி கிரியை
தீரவே தான்முடித்து

நம்மாற் றொழுகுமிந்த ராமலிங்கத் துக்கு
நல்வேதா கமப்படியே
உண்மையா யபிசேகம் அலங்காரஞ் செய்து
உயர்ந்தமந்திர அர்ச்சனைகள்
செய்தே படைப்புமிட்டு தூபதீபங் கொடுத்து
ஸ்ரீராம லிங்கமதை
ஐம்புலனு மொன்றாகி ஆசையை யகற்றி
அறிவுமய மாகநின்று
பூசித்தோர் தங்களுக்கு சகலகர்மம் நீங்கி
பூதலத்திற் றன்மனதில்
யாசித்த புத்திரவர்க்கம் மண்பெண் பொருளோடு
அரசர்புகழ்ந் திடவாழ்ந்தே
புத்திரபவுத்திரர்கள் சுற்றியரு கிருக்க
பிராணனுடல் வேறாகி
முத்திமோட் சம்பெறுவார் ஜனகமகா ராஜன்
மெய்மகிழு மாதரசே
அநேகமுடி மன்னர்களும் கொடுங்கோன்மை யாக
அரசாட்சி கள்புரிந்து
வனவாச மாமுனிவர் தன்னைமதி யாமல்
வாதனைசெய் பாவியர்கள்
கொடியசா பங்கள்பெற்று காடுமலை தனிலே
கொடுமையாய்ச் சஞ்சரித்த
துடியா மிருகமதும் சேதுவில் வந்து
சுகமாக நீராடி
தேவரிசி யோர்களிட்ட சாபமா றனுந்
தீர்ந்துசுய ரூபமதாய்
தேவலோகம் வைகுண்டந் தவத்துக்குத் தக்கபடி
சேர்வார்கள் மாதரசே
மானிடரில் நல்லகுணம் வாய்ந்தபெரி யோர்களிடம்
வாங்கியமு துண்டுபின்னுந்
தான்படுங் கஷ்டங்களுக்கும் பேருதவி செய்த
தனவாழ வைப்பகைத்து
எதிரியாய்த் தீவினைகள் செய்தபா வியரும்
இச்சேதுவில் நீராடி
பதிப்பெருளாம் ராமலிங்க பீஷையைத் தோத்தரித்து
பணிந்தாலப் பாவமெல்லாம்

தீர்ந்துலகி லேவாழ்ந்து நல்லபதமடைவார்
சீதைமகா லெட்சுமியே
உலகில் மனிதருக்கு பெண்ணாக வந்த
உத்தமஸ்திரீ யானவளும்
பலஸ்ரீ களைப்போலே புருஷனை எதிர்த்து
பலதிற் தனைபேசி
அவளுக் கடங்காமல் தீங்குக ளனந்தம்
அக்கிரமங்கள் செய்தவனை
புவனத்தி லேகால தூதர்கொண்டு போயீ
பெரியமலைப் பாறையிலே
படுக்கவைத்துக் கத்தியினால் மாமிசத்தை யறுத்து
படுத்தணலி லேபோட்டு
சுடுவதுவு மல்லாமல் நீங்கா நரகில்
துயரடையப் போட்டிடுவான்
வேந்தரசுரர் தேவர் யாவருந்தான் செய்த
வினைநீங்கச் சேதுவிலே
வந்துதனுக் கோடிதனில் தீர்த்தங்க ளாடி
மாதவப்பே ராமலிங்கர்
செந்தா மரைப்பாதம் பூசித்தா ராகில்
செய்தபா வங்களெல்லாம்
தீருமென்று மாமுனிவர் தேவரிஷி யோர்க்கு
தெரிந்துரைத்தார் ஞாயமதை
பாருலகி லின்னமுமே யாவருஞ் சேதுவந்து
பணிந்திடுவார் தேவியரே
எந்தவிதப் பாவமது உலகமதி லுள்ளோர்
இரக்கமற்றுச் செய்தவரும்
வந்துதனுக் கோடியெனும் சேதுவில் மூழ்கி
மகாராம லிங்கமதை
மனதோர்மை யாகநின்று அர்ச்சித்துப் பூசித்தால்
மாபாத கந்தீர்ந்து
நினைத்ததெல்லாம் கைகூடி ஜெகமீது வாழ்ந்து
நெடுமால் பதமடைவார்
குற்றமில்லா ஏழைகளை அநியாய மாகவே
கொடுந்துன்பஞ் செய்தவரை
சற்றுமி ரக்கமின்றி எமகிங் கிலியர்
கல்லையுடைத் தேகொடுபோய்

இருப்பாலை யிற்போட்டு ஆட்டிச்சார் பிழிந்து
        இரக்கமின்றிப் பன்றிமுகம்

பெருகரஇ லேவெருந்நாள் பொடுவா ரென்று
        பிரான்மறைக ளோதிடுதே

என்றுமே ஸ்ரீராமர் சீதைக்குச் சொல்ல
        இளையோன் விபீஷணனும்

நன்றென்று தீர்த்தமதை அள்ளித் தெளித்து
        நாராயண ராமர்

திருவடியைத் தான்தொழுது அயோத்தி மாநகரம்
        தெய்விக விமானமொடு

கருணையோடு ராமர்முதல் சீதை சகலரும்
        கனிவுடனே தானிரங்க

பரதர்சத்ரு ருக்கர்மந்திரி வணங்கிட வசிஷ்டர்
        பாங்கா யாசீர்வதிக்க

பாமவந்து வரம்ராமர் பரவரு மிரங்கிப்
        பாருலகை யாண்டிருந்தார்

இன்னமனே கந்தீர்த்தம் இருக்குதையா அங்கே
        எனக்குத் தெரிந்தமட்டும்

பின்னாலெலாவ் வொன்றாக சொல்லுவேன் சபையோர்
        பெருமையாய்க் கேட்டிடவே

ஒருகோ டுடையானே இன்னவர் பாடலுக்கு
        உதவிசெய்வாய் ஐங்கரனே

மகாமகிமை பெற்றதொரு சக்கரத்தீர்த்தம்
        விளங்கும் யிடந்தனிலே

புகழாகத் தேவிபுட பட்டண மென்று
        பிரபலப்பேர் வந்ததொரு

காரணங்க ளின்னதென்றும் அந்தத் தீர்த்தத்தில்
        கருத்தாய் முழுகினபேர்

தீரமுட னேஅடையும் பலனென்ன அதனை
        தேசிகரே சொல்லுமென்றார்

அப்போது சூதமுனி சந்தோஷம் பெருகி
        அருந்தவஞ்செய் யோகிகளே

தப்பாதகா காசமுதல் தேவதை யஞ்சாகி
        தனத்த விமலனுமாய்

அமலனாய் சோதியுமாய் விளங்குஜெக தீசன்
        அருள்பெற்ற தேவரிசி

காசிபர்க்குத் தாரம்ரெண்டு ஒருபெண்பேர் அருந்ததி
 கருத்தா யவள்வயற்றில் (யாம்
இந்திராதி தேவர்வந்தார் அதிதிவயற்றில்
 எண்ணரிய ராட்சதர்கள்
வந்துவெகு நாள்கழித்து தேவாசுரார்க்கு
 மாபோர் நடந்திடவே
வெகுகாட்போர் செய்ததினால் தேவர்கள் மீறி
 வெகுகோடி ராட்சதரை
தருக்கதொரு ஆயுதத்தால் ஒன்றும் விடாமல்
 சங்கரித்துப் போட்டிடவே
அசுரரெல்லா மாண்டபின்பு அதிதி மனவருத்த
 மாருத சோபமுற்று
விசுவாச மாய்த்தனது மகளையழைத்து
 வேண்டியதோர் சேதிசொல்லி
இனியா கிலுமுனது வயற்றிலேகெற்பம்
 இதமாயுண் டாம்படிக்கு
வனத்திற் பெருந்தவசு செய்துவரம் வாங்கி
 வருவாய் மகளேயென்று
சொல்லவே தான்கேட்டு வணங்கி விடைபெற்று
 சுகமாய் வனமேகி
வல்லதப மாமுனியாஞ் சுபாரிஷ முனியை
 மனதிலே தானினைத்து
எருமைமுகத் தோடிருந்து வெகுநாள் தபசு
 இன்பமுற்றுச் செய்திடவே
அருந்தவசுக் கேயிரங்கி சுபாரிஷ முனிவர்
 அவள்முன் பிரசன்னராய்
தோன்றிவா பெண்ணேநீ சற்குணியே நீசெய்
 சுகமாகிய தவத்தால்
தான்மகிழ்ந்தே னுன்பேரில் சந்தோச மாச்சு
 நலமாக உன்மனம்போல்
உன்வயற்றிலேபிறக்கும் பிள்ளையா னவனும்
 உயர்ந்தசுத்த வீரனுமாய்
தன்மையா யதிவீர பாராக்கிரம சாலியாய்
 நாட்டினி லனேகவரம்
பெற்றவனு யுந்தனைப்போல் மகிஷ முகத்தோடு
 பிறப்பான்நீ யஞ்சாதே

உற்றபிள்ளை பெரும்வகையில் என்னிட மிருமிவன்
றேஷியே தானழைத்து
தனதுபர்ண சாலையிலே யிருமென் றுரைக்க
கானிருந்தான் மாதரசே
அனங்கிருந்து நாளையிலே யவன்கெற்பமாகி
ஆலகால விஷம்போல்
மகிஷ முகத்தோடு ஒருபிள்ளை பிறந்தான்
மனமகிழ்ந்தே தாயாரும்
மகிடாசூரன் னெனவே நாமமுஞ்சூட்டி
வளர்த்துவரு நாளையிலே
எருமைமுக அசுரனுக்கு சகலவல் லமைகளும்
ஏற்றமா யுண்டாகி
பெருமையுடனே தனக்க யெதிரியில் லாமல்
பெலமா யிருக்குமப்போ
முன்தேவ யுத்தமதில் பயந்தோடி யொழிந்த
மூர்க்கமுள்ள ராட்சதரில்
நன்மையுள்ள விப்பிரசித்தன் மகன்வித்துமாலி
நாட்டில் மகாபலன்கள்
பெற்றதொரு ராட்சதர்கள் வெகுபடைகள் கூட்டி
பிரபலமா மகிஷனிடம்
உற்றவித்து மாலியவன் அய்யாமகி டாசூரா
உரைக்கக்கே ளின்னதென்று
எங்களையும் யெங்களுக்கு முன்னோர் களையும்
இந்திரனுந் தேவர்களும்
சங்குசக்கர பாணியனும் சேர்ந்துபோர் புரிந்து
சராசரஞ்சூழ் ராட்சதரை
நாசப் படுத்தியதால் பயந்தோடி யொளிந்தோம்
நாதனில்லை யெங்களுக்கு
நேசனாய் நீயிருந்து தேவரைச் செயித்து
நீதருவாய் ராஜாவே
என்றுசொல்லத் தான்கேட்ட மகிடாசூ ரனுக்கு
இருகண்ணுந் தீப்பறக்க
மன்றிலடங் காக்கோபங் கொண்டுபயப் படாதீர்
மாதவத்துத் தேவர்களை
கலப்பொழுது போர்புரிந்து தேவரைக் கொல்வேன்
கண்ணாலே பாருமென்று

அனல்போல வேகொதித்து அரக்கர்படை யோடு
அமரூ பதியதனை

சுற்றியே தான்வளைந்து இந்திராதி தேவரொடு
தொடுத்தான் பெரியயுத்தம்

வெற்றிபெற வேதேவ வருஷமொரு நூறு
வீரியமாய்ப் போர்புரிய

இந்திரன் தேவர்பிர்மன் விஷ்ணுமுத லானோர்
இந்தமகி டாசுரன்முன்

தொந்தமா யுத்தமது செய்யமுடி யாமல்
சுகமாம் பதியும்விட்டு

உத்தரபா கத்திருக்கும் கயிலாசஞ் சேர்ந்து
உமாகேசன் தன்பதத்தில்

மெத்தமுறை யிட்டவர்கள் மகிஷனா லடிபட்ட
விபரமெல்லாஞ் சொல்லினரே

அம்முறைகேட் டேபரமன் செந்தணலாய்க் கோப
மதிகரித்த கோபமதை

செம்மைவட வாக்கினியிற் கோடியம் சதிகமாய்
செய்ததையோர் பெண்முகமாய்

நாரணனார் கோபமதை சடலமது வாக்கி
நல்லஎமன் கோபமதை

பூரண உதடாக்கி பிரமன்கோ பத்தை
பொற்பாதந் தாளாக்கி

கயிலயங் கிரியதனை யிரண்டு ஸ்தனமாக்கி
காசிபர்மைந் தன் அருணன்

செயலான கோபமதை முளங்கால்க ளாக்கி
சிறந்ததிக்குப் பாலகரை

கையின் விரலாக்கி அஷ்டவசு தன்னை
னகநக மாக்கியுமே

வெயிலில்லாச் சந்திரனை நாசியது வாக்கி
விரிந்தவட வாக்கினியை

செந்தழற்போற் கண்ணாக்கி சண்டமா ருதத்தை
சீர்புருவ மாக்கியுமே

இந்திராதி தேவதைகள் கோபத்தியாலே
எற்றபுஜம் நான்கினொடு

அஷ்டகரம் ஆயுதங்கள் பிரகாசித் திடவும்
அஷ்டதிசை யும்நடுங்க

துஷ்டர்களைச் சங்கரிக்க பரஞ்சோதி வடிவாய்
தோன்றினாள் துர்க்கையுமே
கண்டந்தத் தேவரெல்லாந் தோத்திரங்கள் செய்து
களமா யவரவர்கள்
பண்டுமுதல் வைத்திருந்த ஆயுதமந் திரசக்தி
பாங்காய்க் கொடுத்திடவே
துர்க்கையம்பாள் வாங்கிடவே கோபாவேசம் பெருகி
தொன்றுமண்ட லம்நடுங்க
கெர்ச்சனையிட் டம்பாளும் விசுவரூபத்தோடு
கெம்பீர மாகநிற்க
பரமசிவ னார்பார்த்து மூவிலைவேர் சூலத்தை
பாங்காக வேகொடுத்து
உரமிருந்த சிங்கமதை வாகனமாய்க் கொடுத்து
உலகழிக்கும் பூதகணம்
வேதாளம் பைசாசம் படைகளாய்க் கொடுத்து
மேதினியில் மாயிசத்தை
சாதாரண பக்ஷணமாய் செய்து பாலவனத்தில்
தானிருந்து தேவருடன்
எதிர்த்தமகி டாசுரனைச் சங்கரித்து வரவே
ஏற்றவா றுங்கொடுத்து
பதியாம் பரமசிவம் அருள்செய்தனுப்ப
பாங்காய்ப் பணிந்துதுர்க்கை
விடைபெற் றுங்காரமொடு சிங்கவா கனமேறி
வேதாள பூதகணப்
படையோடு வாத்தியமுழங்க வருகின்ற துர்க்கையம்
பாளை மகிடாசுரனும்
ராட்சதப் படைகள்கண்டு மாகோபத்தோடு
ரணதுர்க்கா தேவிதனை
மாச்சரியத் தாலிவர்கள் மாதேவி தன்னை
வளைந்துமே சூழ்ந்து கொண்டார்
சுற்றிநின்ற ராட்சதரை கண்டுஅண்ட முகடதிர
சூழ்க்கனம் கடல்சுவர
பற்றியனல் தான்சொலிக்க கெற்சித்து நின்ற
பராசக்தி துர்க்கையின்மேல்
அரக்கரெல்லாம் வில்வளைத்து அனேகமாயிரம்பாணம்
அமோகமாய்த் தான்விடுத்தார்

சிறந்தமே தேவாதிகளும் தங்கள்வில் வளைத்து
செந்தணல்போ லஸ்திரங்கள்
ஆகாசம் பூமியெங்கும் பாணமயமாக
அளவாந்த கணைகளதை
பாகமாய்த் தான்விடுத்து அசுரர்கள் விட்ட
பாணங் கணையறுத்து
அசுரர்கள் தேரோடுபரி வில்கொடி யறுத்து
அரக்கர்தலை கால்வேறு
பசந்த உடலிடுப்பு வெட்டுண்டு குடல்கள்
பாங்காய் மூளைசிதறி
ரத்தவெள்ள மாரோட பிணமலையாய் குவித்து
நாய்நரியோ டேகழுகு
சித்தியே பூதபிசாசு நின்று நடமாடச்
செய்து அசு ரப்படையை
நாசமது செய்துவிட்டு அசுரப்படையின்னும்
நாட்டிலுண்டோ வென்றடிட்ட
காசமது செய்துநின்றார் வானோர்களிதனை
கண்டான் மகிடாசுரன்
மாகோபத் தாலெறிந்து பல்கடித்து கண்சிவந்து
வளைத்துவில் லிலம்புதொட்டு
சரகோப சாங்கமதாய் விஷந்தோய்ந்த பாணம்
சரமாரி யாய்விடுத்து
தேவேந்தி ரன்மேரில் ஆயிரங் கணையும்
இரட்டி வருணன்மேலே
கோபத்தா லாயிரமாம் வாயுவு அஷ்டவசுக்கள்மேல்
கொடுங்கணை ளாயிரமாம்
வானோர்கள் தன்மேலே கணக்குமித மில்லா
வாளிஅநேகந் தொடுத்து
காளைமே லேஓடத் தூக்கி யடித்து
கர்ச்சித்து நின்றிடவே
கண்டுதூர்க்கா தேவியரும் அடங்காச் சினங்கொண்டு
காத்திருந்த தன்படையை
தூண்டியே விடவே பூதவேதாளபடை
தோன்றிச் சண்ட மாருதம்போல்
எழும்பி மகிடாசுரன் தொடுத்த பாணத்தை
ஓட்டிப் பிடித்தொடித்தும்

பழுதாக வேமுறித்தும் தங்கள்கையி லுள்ள
 பாலங்களைத் சூலமதால்
அசுரப் படைகள்தனை கால்கை யுடல்வேறாய்
 அறுத்துத்தூ ளாக்கிடவே
பொசுங்கியெரிந் தும்மரக்கர் தேவப்படை யோடும்
 போர்புரிய மாட்டாமல்
திசாதிசைக ளில்ஓடி ஒளிவது கண்டான்
 தீரமகி டாசூரன்
பசாசுகளைத் தானடித்தும் பூதவே தாளப்
 படையோடுதன் மந்திரிமார்
வெகுபேர்க ளுங்கூடி சிங்கத்தை நாய்கள்
 விரசாகச் சூழ்ந்ததுபோல்
சொருசாக வில்வளைத்து சரங்களைப் பூட்டி
 சனைமாரி போல்பொழிந்தான்
துர்க்கையம்மாள் தான்பார்த்து மாகோபங்கொண்டு
 துரிதமாய் வில்வளைத்து
இக்கெட்டுஞ் செவிடுபடக் குணத்தொனிகள் செய்து
 இரத்தவச்சி ராயுதம்போல்
அர்த்தசந்திர பாணமொன்று எடுத்து மந்திரித்து
 அம்பிகையாள் விட்டிடவே
மெத்தவே கத்துடனே கோடிகோடி யாக
 விரிந்ததந்தப் பாணமது
மகிடாசூ ரன்படைக்குள் புகுந்ததப் பாணம்
 மதகரியி லெச்சமதும்
விகிதபரி பத்துலெட்சம் காலாள் கோடாகோடி
 வெட்டிமலை போற்குவிக்க
மாயவனென் றோரவுணன் அம்பா ளஸ்திரத்தால்
 மாசேனை மாண்டதெல்லாம்
காயகமாய்க் கண்டுவெகு சேனையுட னெதிர்த்து
 சரமாரி யாய்க்கணைகள்
துர்க்கையம்மாள் மேல்விடவே அம்மாள் ஜெயித்து
 துரிதமா யக்கினியின்
அஸ்திரத்தைத் தானெடுத்து அபிமந்திரித்து
 அகோரமாய் விட்டிடவே
சடசடவென் றோசையொடு எங்குமனற் பொறிசிந்தி
 தாக்கிட மாயன்மாற்பில்

திடமாய்ப்பாய்ந் தூடுருவ ரத்தமது கக்கி
        ஜெகமதிர வேகதறி
பூமிபதி லேவிழுந்து உயிர்விட் டிறந்தான்
        போர்க்களத்தில் மாயனுமே
தாயிசமில் லாமகிஷன் சண்டகோ பாயிவளைத்
        தான்ஜெயிப்யா யென்றனுப்ப
வெகுசூர ராட்சதர்கள் படையோடு வந்து
        வில்வளைத்துப் பாணமதால்
மகிமையுள்ள சக்கரத்தால் பூதகணத்தோடு
        யாதாவை யுமடிக்க
கண்டுமகா தேவியம்பாள் ஒருசரம் விட்டு
        கையில் கொடியறுத்து
சண்டன் தலையைவெட்டி பூமியிலே தள்ளினாள்
        தயாபரியாந் துர்க்கையுமே
மகிஷன் படைவீரர் மந்திரிமாரெல்லாம்
        மாகோபத்தாற்கூடி
உகாந்த காலக்கினிபோல் சரமாரி யாகமன
        தொருமித் தடித்திடவே
மகாதுர்க்கா தேவியுமே பாசுபதாஸ்திரத்தை
        மகிழ்ந்தெடுத்துப் பூசைபண்ணி
அகாதமாய்க் கணைகள்விட்டு மகிஷன் தவிர
        யாவரையும் நீராக்கி
வருவாயென் றேவிடவே பாசுபத மொன்று
        மகாகோடி யாய்விரிந்து
பிரமாஸ்திரம் நாராணாஸ்திரம் பஞ்சதே வாஸ்திரமாய்
        பிறந்துமகி ஷன்சேனை
யுட்பிரவே சித்தவர்கள் ஏறியதேர் வாகனம்
        உறுதியுள்ள ஆயுதத்தை
வெட்டியந்த ராட்சதரை எறிந்து நீராக்கி
        விமலியிடம் வந்திடவே
பனிக்கூட்டத் தைவிலக்கி பானுவந் தாற்போல
        பாவியுட சேனைதனை
துணித்துதுர்க்கா தேவியம்மாள் சூரியனைப் போலஜ்
        ஜொலிக்கக்கண் டேமகிடன் (கே
வடவாமு காக்கினிபோற் சீறி யெழுந்து
        வாகாய்த்தன் கால்குளம்பால்


திடமாய்ப் பாதாளம்வரை பூமிவெடித் திடவும்
    திரண்டகொம்பைத் தாணசைத்து
புருவங் கனைநெரித்து கண்ணிலனற் பொறிசிதற
    பொற்கொடியாளைப்பார்த்தும்
கருநீல கிரிபோலும் மேககூட்டம் போலும்
    கடைவாய்ரத் தம்பொழிய
உதட்டைக் கையைக்கடித்தும் வாலையுதரி முரிக்கி
    உயர்ந்தாகா சம்பாய்ந்தும்
விதமாக ஏழுகடல் பிரண்டுவந்தாற் போல
    வீரராட்ச தப்படைகள்
சூழ்ந்துவரத் தேவியொடு வந்தே எதிர்த்தான்
    துர்க்கையம்பாள் தான்பார்த்து
தாழ்ந்தமகி டாசுரனை யினிப்பூமி யில்லைப்ப
    தழகல்ல வென்றுயெண்ணி
வாகாய்மந் திரகிரியை சேடன்வளைந் தாற்போல்
    மகிமையுடன் மாதேவி
நாகபா சந்தனையே யெடுத்தம்பாள் வீச
    அப்பாச மானதுவும்
ஆலகால விஷம்போலும் அந்தகாரம் போலும்
    அதிரசண்ட மாருதம்போல்
காலாக்கினிபோல மகிடனை வளைந்துகொள்ள
    கட்டுண்டு கண்பிதுங்கி
வாயிலிருந் தேயிரத்தங் குபீரென்று கக்க
    மகிடனந்த ரூபம்விட்டு
பாயுகின்ற சிம்மமென உருவமெடுத்து
    பாவையொடு வந்தெதிர்த்தான்
தேவியுங்கண் டப்போது நாசிம்மாஸ்திரத்தை
    தீவிரம தாகவிட்டு
பாவிசிங்க ரூபமதை யிரண்டுபிள வாக
    பாரிற் பிளந்தெறிந்தான்
சிங்கஉரு மாறிடவே யானைவடி வாகி
    சீறியே வந்தெதிர்த்தான்
பொங்கித் துதிக்கையினால் சிங்கவா கனத்தோடு
    பொற்கொடியைத் தூக்கினனே
அம்பாள்தன் சக்கரத்தால் யானைத்துதிக்கை
    அற்றுவிழ வெட்டிடவே

வம்பன்மிக ஆக்கிரமித்து மகிசரூப மாகி
வான்பூமியும் நடுங்க
கெர்ச்சித்து வந்தெதிர்க்க அம்பா ளனேக
கீர்த்திபெற்ற பாணமதை
அர்ச்சித்து விட்டதெல்லாங் கொம்பினாற் தட்டி
அநேகம் பருவதங்கள்
விருக்ஷத்தை யுந்தனது கொம்பால் கிளறி
விட்டெறிந்தான் துர்க்கையின்மேல்
ஒரு கண்டாயுதத்தாலே தேவி நொருக்கி
உரைப்பாள் மகிடாகேள்
உன்னுடைய சேனையாள் கணப்போ தழித்து
உத்தம ராசனுக்கு
சொன்னபடி தான்கேட்க வாகனமா யனுப்புவேன்
துஷ்டப்பயலே யென்று
வீராவே சத்தோடு தன்கை மடித்து
வேகமாய் மகிடனுட
சிரசிலே குத்திடவே அந்தக்குத் தாலே
சிரமா னதுகலங்கி
கண்தெரித்துத் தேகமதின் எலும்பெல்லாம் நொருங்கி
கலங்கியுள் ளம்பதறி
முன்னிற்க மாட்டாமல் தென்றிசையை நோக்கி
ஓடினா னேமகிடன்
அம்பா ளிதுவரிந்து மகிடனைக் கொல்லென்று
அனுப்பினாள் சிங்கமதை
வம்பாநீ ஓடாதே யெங்கேபோ னாலும்
வதைப்பே னுனதுயிரை
என்றுசிங்கந் தான்துரத்த ஓடமுடி யாமல்
ஏங்கிமகி டாசுரன்
தன்கண்ணால் நோக்கிடவே சேதுவை யடுத்த
சக்கரதீர்த் தந்தானும்
பத்துநா ளிகையின்வழி நெடுகமும் ஆழமும்
பாந்ததீர்த் தந்தனிலே
சித்தங் கலங்கியவன் குபீரெனக் குதித்து
சீரா யொழிந்திடவே
பின்னே தொடர்ந்துவந்த தேவியும் பார்த்து
பெருமானய யால்மகிடன்

தான்மறைந்தா னென்று அம்மன் உத்தர முகமாகத்
தானே திரும்பிவந்து
சக்கரத்தீர்த் தக்கரையில் அம்மன்வந்து நிற்க
தட்சணமா காசமதில்
பொக்கெனவே வாக்குஒன்று மகிடாசூரன் யிந்தப்
பொய்கையி லிருக்கின்றான்
எனவேதான் சொல்லிடவே சிங்கமதை அம்மன்
ஏவினாள் பொய்கையிலே
மனவேக மானசிங்கம் தண்ணீரை யெல்லாம்
வாய்வைத் துறிஞ்சிடவே
பதுங்கயிட மில்லாமல் மகிட னுந் தெரியப்
பாய்ந்து அம்ம னோர்காலால்
மிதித்தே சிரசினிலும் உடலிலோர் காலால்
மேன்மையுட னேமிதித்து
முத்தலைச்சூ லத்தாலே கழுத்திலே குத்தி
மூர்க்கனைத்தன் வாளாலே
சித்திரவதை யாகவெட்டி யெறிந்துமே நின்றாள்
ஜெகமெங்கு மேகலங்க
யுககால பேரொளிபோல் யிரைச்சலிட்டு மகிடன்
ஓடிங்கிரத்தங் கக்கியவன்
மகிடசூ பஞ்சிதறி மாண மடைந்து
மாண்டான் புவிதனிலே
அம்பாளின் தேகமெங்கும் சிவந்துசெவ் வானம்போ
ஆங்கார மாகநிற்க (ல்
உம்பரெல்லாங் கண்டுஅங்கே பூமாரி பொழிந்தார்
உலகமெல்லாங் கொண்டாட
தேவர்களெல் லாங்கூடி அம்பாள் தனக்கு
தேவாலய முடித்து
ஆலவாய்ப் பட்டணமும் உண்டுபண்ணி அதிலே
அன்பாய்க் குடியேற்றி
தேவிபட்டண மெனவே பேருங் கொடுத்து
தேர்திருநா ளுண்டாக்கி
தாவித்து அம்மனையும் அபிஷேக அலங்காரந்
தானே நிவேத்தியம்வைத்து
பூசித்துத் தேவரெல்லாம் அம்மனிடம் விடைபெற்று
போனா ரவர்பதிக்கே

மகிஷன் உடல்தனையே பூதவே தாளம்
வயற்நிறைய வேபுசித்து
ஆனந்தக் கூத்தாடி அம்மன்வாசற் காவலாய்
அடங்கிநின்ற தேபடைகள்
வானோ ரிடர்தீர்த்த சக்கரதீர்த் தத்தில்
மகிமையொடு நீராடி
ஒன்பதுகல் நவக்கிரக தீர்த்தங்க ளாடி
ஓங்காரக் கணபதியை
நன்மைபெற வேவணங்கி துர்க்கை யம்மானை
நமஸ்கரித்துப் போற்றிசெய்து
தனுக்கோடி நீராடி ராமலிங் கத்தை
தானேபூ சித்ததொரு
மனுக்கள் உலகமதிற் செய்தபாவந் தீர்ந்து
மகாராஜர் போல்வாழ்ந்து
கடைநாளி லேபரமன் கடாட்சமது பெற்று
கயிலைதனில் வீற்றிருப்பார்
தடையில்லை முனிவர்களே தேவிபட் டணமும்
சக்கரதீர்த் தத்தினுட
மகிமையிது வெனவேத வியாசருட சீஷர்
மறையுணர்ந்த சூதமுனி
சுகமா யுரைத்ததொரு நூல்சார மறிந்து
சொன்னேன் வர்ணிப்பாக
செட்டியூ ரணித்தெருவு மூத்திருள நாடார்
சிந்தைமகிழ்ந் தேயுரைத்த
சேதுவின் மகத்துவத்தை எழுதினோர் படித்தோர்
செவிகொடுத்துக் கேட்போரும்
தீதில்லா தென்னாளும் வாழ்ந்துமுத்தி பெறுவார்
தேசிகனோர் வாழியதே.

முற்றிற்று.



ஸ்ரீ ஜெகதாம்பாள் பிரஸ், சிம்மக்கல் ரோடு, மதுரை-33,